**திருகோணமலை நகர சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

திருகோணமலை நகர சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (255ஆம் அத்தியாயம்) 181(1) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திருகோணமலை நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் உள்@ராட்சி நிறுவனத்திற்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நான் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் வெளிப்படுத்துகின்றேன்.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்@ராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.
நகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பதற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

  இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நகர சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்ட ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் கீழே குறிப்பிட்ட தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) நகர சபையின் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்தை ஒத்திருந்தன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடு

பின்வரும் கணக்கீட்டு குறைபாடு அவதானிக்கப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 உள்ள படியான நகர சபை ஆயர்வேதவைத்திய சாலையின் காணப்பட்ட ரூபா 377,790 மருந்துப் பொருட்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | இனிவருங்காலங்களில் இவை குறிப்பாக வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | மருந்துப் பொருட்களின் இருப்புப் பெறுமதி நிதிக்கூற்றில் உள்ளடக்கப்படல் வேண்டும். |

#### 1.6.2 தொங்கல் கணக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 உள்ள வாரான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 11 வருடங்களுக்கு மேலாக காணப்படும் ரூபா 11,863,654 தொகையான தொங்கல் கணக்கு மீதி சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. | வழுக்கள் கண்டறியப்படின் நிகழாண்டு இறுதிக் கணக்குகளில் சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | தொங்கல் கணக்கு சீர் செய்யப்படல் வேண்டும். |

### 1.7 இணக்கமின்மைகள்

#### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| **(அ)** | **நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் அத்தியாயம் 255** | | | |
| (i) | 164 ஆம் பிரிவு | சுற்றுலா சபையின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒருவிடுதியகம், உணவுச் சாலை அல்லது உறையகத்தின் வருமானங்கள் மீது 1% சதவீத வரையான அகுமதி பத்திரக் கட்டணம் அறவிடப் படவேண்டிய போதிலும், அவ்வாறு அறவீடுகள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | 5 விடுதியகங்களிறகு தீர்வை செலுத்த வேண்டுமென அறிவு றுத்தப்பட்டுள்ளது | நகர சபை கட்டளை சட்டத்திற்கிணங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ii) | 157(7) ஆம் பிரிவு | மீளாய்வாண்டுக்கான விளம்பர கட்டணம் கூட்டுமொத்தம் ரூபா 237,200 அறவீடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | நிலுவைத் தொகையினை பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதுடன் நிலுவையினை செலுத்தாத விளம்பர பலகைகளை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நகர சபை கட்டளை சட்டத்திற்கிணங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | 2018 சனவரி 24 ஆம் திகதிய 02/2018 ஆம் இல. பொதுநிர்வாக சுற்றறிக்கை | மொத்தபணியாட் தொகுதிக்கு வருடாந்த செயலாற்றுகை ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப் பட்டிருக்கவில்லை. | வருடாந்த செயலாற்றுகை ஒப்பந்தங்கள் கைச்சாத்திடுவதற்கும் ஆரம்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை அத்தியாயம் XIX பிரிவு 6.1 | 50 எண்ணிக்கையான உத்தியோகத்தர்கள் 05 வருடங்களுக்கு மேலாக அரச விடுதிகளில் தங்கியுள்ள பணியாளர்கள் தொடர்பில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படாததுடன், புதிதாக விண்ணப்பித்தவர் களுக்கு விடுதிகளை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | தாபன விதிக் கோவையின் பிரகாரம் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| **(ஈ)** | **ஏனைய சுற்றிக்கைகள்** | | | |
| | 2018.07.19 ஆம் திகதிய 2018/e உள்@ராட்சி -01 ஆம் இல. உள்@ராட்சி சுற்றுநிருபம் | பிரசைகளுக்கான இணையத்தின் மூலமாக சேவைகளை பெறுவதற்கான வசதிகள் ஏற்படுத்திக் | நகரசபைக்கென பிரத்தியேகமாக வலைத்தளம் (Webside) ஒன்று | உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கொடுக்கப்பட்டிருக்கவில்லை. | தயாரிக்கப்பட்டுள்ளது. | |
| **(ii)** 2018 ஜுலை 25 ஆம் திகதிய 02/2017 ஆம் இல. வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை | நிறுவனத்தினால் நிறைவேற்ற வேண்டிய செயலாற்றுகை பெறுபேற்றுடன் இணைந்த ஆகக் குறைந்தது 03 முதன்மை செயலாற்றுகை சுட்டிகளேனும் அறிவிக்கப் பட்டிருக்கவில்லை. | குறித்த சுற்றறிக்கையின் பிரகாரம் நிகழாண்டில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவீனத்திற்கு மேலான வருமான மிகை ரூபா 2,374,395 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 28,691,748 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| அ) வீதவரி மற்றும் வரி | | |
| i) நகரசபையின் அதிகார எல்லைக்குள் 18,533 அசைவற்ற ஆதனங்கள் மீது ஆதன வரிகள் அறவீடு செய்வதற்காக சபையினால் ஆதனஉரிமையாளர்களுக்கு “K“ படிவத்தின் ஊடாக அறிவித்தல்கள் வழங்கப்பட வேண்டியிருந்தும், மீளாய்வாண்டிற்காக 10,130 ஆதன உரிமையாளர்களுக்கு 'K' படிவத்தின் ஊடாக அறிவித்தல்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | இனிவரும் காலங்களில் K படிவங்கள் வருமான பரிசோதகர்களினூடாக முழுமையாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். | ஆதனவரி நிலுவை தொடர்பாக K படிவம் ஆதன உரிமையாளர்களுக்கு வழங்கப்படல் வேண்டும். |
| ii) நகரசபையினால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுகணக்குகளில் மீளாய்வாண்டிற்கு முன்னைய ஆண்டின் ஆதனவரி நிலுவை ரூபா 97,870,729 தொகை சேகறிப்பதற்காக 05 நடுக்கட்டல் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்ட போதிலும் அவர்களால் வருடத்தினுல் ரூபா 11,123,969 தொகை மாத்திரம் அறவிடப்பட்டுள்ளது. இத் தொகை நிலுவைத் தொகையில் 11% சதவீதமாகும். | நிலுவை வரி செலுத்துனர்களிற்கு பிரத்தியேகமான அறிவுறுத்தல் கடிதங்கள் வழங்கப்படுகிறது. | ஆதனவரி நிலுவை அறவீடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| iii) நகர சபையினால் இறுதியாக ஆதனவரியானது 2009 ஆம் ஆண்டில் மதிப்பீடப்பட்டிருந்தது. அத்தோடு, ஆண்டுப் பெறுமானத்தில் அறவிடப்படும் | பிராந்திய விலைமதிப்பு திணைக்களத்தின் பிரத்தியேக குழு ஒன்றினை நியமிக்கப் பட்டு தொடர் நடவடிக்கை | ஆதனங்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு அதற்கிணங்க ஆதனவரி அறவீடு செய்யப்படல் |

| | | | |
|---|---|---|---|
| | வீதமானது சகல விதமான ஆதனங்களுக்கும் 6% சதவீதம் மாத்திரமே ஆனது. | மேற்கொள்ளப் படவுள்ளது. | வேண்டும். |
| (இ) | வாடகை<br>------------- | | |
| i. | 167 கடைகள் வாடகைக்கு வழங்கப்பட்ட போதிலும் 21 கடைகளுக்கு உடன்படிக்கை செய்யப் பட்டு குத்தகைக்காலம் குறிப்பிடப் படாமல் நீண்டகால குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது. | 2020 மற்றும் 2021 வருடங்களிலும் எவராலும் குத்தகைக்கு எடுக்கப் படாததனால் வருமான இழப்பினை தவிர்க்கும் பொருட்டு முன்னைய ஆண்டு குத்தகையிற்கு எடுத்த 21 குத்தகை தாரர்களிற்கும் மீண்டும் அதனை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது. | குத்தகை உடன்படிக்கை கைச்சாத்திடும் போது நிபந்தனைகள் தெளிவாக உள்ளடக்கப்பட வேண்டும். |
| ii. | மத்திய சந்தைக்கடைத் தொகுதியில் 176 கடைகளுக்கான 2009 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு காலப்பகுதி வரையான வாடகை நிலுவை ரூபா 17,480,539 அறவீடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நிலுவைத்தொகை ரூபா. 254,130 அறவீடு செய்யப்பட்டுள்ளது. | நிலுவைகளை அறவீடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| iii) | அத்தோடு, 13 வருடங்களுக்கு முன்பு மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டினை அடிப்படையாகக்கொண்டு வாடகை அறவீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | விலைமதிப்பீட்டு திணைக்களத்தினரால் குறித்த கடைகளிற்கான மதிப்பீடு மேற்கொள்ளப்பட்ட பின்னர் புதிய வாடகை தொகை நிர்ணயிக்கப்படும் | கடைகளிற்கான வாடகை மதிப்பீடு செய்யப்பட்டு புதிய வாடகை தொகை நிர்ணயிக்கப்படல் வேண்டும். |
| iv. | மத்திய சந்தைக் கடைத்தொகுதியில் 215 கடைகள் காணப்பட்ட போதிலும் 2009 ஆம் ஆண்டு தொடக்கம் 48 கடைகள் வாடகைக்கு வழங்கப் பட்டிருக்கவில்லை. இதனால் கூட்டு மொத்தம் ரூபா 33,186,816 வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது. | கடை அமைப்பினை மாற்றி இதனை ஒரு உல்லாச விடுதியாக மாற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. | பொருத்தமான நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவு என்பவற்றின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகளும் நலன்புரியும் ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| **அரச உத்தியோகத்தர் விடுதி** | | |
| i) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 உள்ள வாரான அரச உத்தியோகத்தர்களின் 10 வருடங்களுக்கு மேலாக நிலுவையாகக் காணப்பட்ட 109 சந்தர்ப்பங்களுக்குரிய ரூபா 833,819 விடுதி வாடகை அறவிட வேண்டியிருந்தது. | அரச விடுதி வாடகை நிலுவை செலுத்தாதவர் மீது வழக்கு தாக்கல் செய்வதற்கான ஆதாரங்கள் ஆராயப்பட்டு வருவதுடன் அறிவுறுத்தல் கடிதங்களும் வழங்கப்பட்டுள்ளது. | விடுதி வாடகை நிலுவைகளை அறவீடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப் படல் வேண்டும். |
| ii) நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 255 ஆம் அத்தியாயத்தின் 171 பிரிவிற்கு முறனான வகையில் ரூபா 7,617,690 பெறுமதியான கடை வாடகை பதிவழிக்கப் பட்டுள்ளது. | கடைகள் நிலுவையில் ரூபா.7,617,690 இனை விட்டுவிடுதல் தொடர்பில் அமைச்சின் அங்கீகாரத்திற்கு அனுப்பி வைக்கப் பட்டது. எனினும் சில விளக்கமின்மைகள் காணப்பட்டமையால் அவற்றை சீர்செய்து மீள் அனுமதியின் பொருட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | வருமானப் பதிவளிப்பு தொடர்பாக அமைச்சிடம் அனுமதி பெறப்படல் வேண்டும். |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| நகரசபைக் கட்டளைச் சட்டத்தின் 157 ஆம் பிரிவின் கீழ் 30 பிரதான விடயங்களை நிறை வேற்றுவதற்காக துணைச் சட்டங்கள் விதிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2021 திசெம்பர் 31 வரை 05 விடயங்களுக்காக மாத்திரம் துணைச் சட்டங்கள் விதிக்கப்பட்டிருந்தன. | ஏனைய துணைச் சட்டங்கள் தயாரிப்பதற்கான நடவடிக்கை மேற் கொள்ளப்படுகின்றது. | துணைச் சட்டங்கள் விதிக்கப்பட்டு தேவையான மேற்பார்வை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| **அ) பராமரிப்பு மற்றும் திருத்தங்கள் செய்யப்படாமை** | | |
| நகர சபைக்குரிய 45 வாகனங்கள் 02 ஆண்டு தொடக்கம் 15 ஆண்டுகளாக திருத்தம் மேற்கொள்ள வேண்டியிருந்தும் இன்று வரை திருத்தம் செய்வதற்கான அல்லது ஏல விற்பனை செய்ய நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | பெரும்பாலான வாகனங்களிற்கு உதிரிப் பாகங்கள் இன்மை யினாலேயே அவற்றை திருத்தம் செய்ய முடியாத நிலை காணப்படுகிறது. | உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

**ஆ) பொறுப்பேற்கப்படாத சொத்துக்கள் / உரிமை மாற்றப்படாத சொத்துக்கள்**

| | | |
|---|---|---|
| 51 எண்ணிக்கையான வாகனங்கள் 03 தொடக்கம் 35 ஆண்டுகள் வரை நகர சபையினால் பயன்படுத்தப் படுகின்ற போதிலும் நகர சபையின் பெயருக்கு உரிமை மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | இவ் வாகன பதிவுப் புத்தகங்கள் தொடர்பில் பிரதம செயலாளரின் அனுமதியினைப் பெற்று காவல்துறையினரிடம் முறைபாடு மேற் கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | -மேற்படி- |

**இ) பயன்படுத்தப்படாத / குறைவாக பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

| | | |
|---|---|---|
| வைத்தியசாலை கழிவுகளை எரியூட்டுவதற்காக பொருத்தப்பட்ட ரூபா 5,695,830 இயந்திரம் 2018 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை பயன் படுத்தப்படாது காணப்படுகின்றது. | இவ் இயந்திரத்தினை குழு ஒன்றினை நியமித்து ஏல விற்பனை செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |

**3.4 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| அ) ஊழியர் வெற்றிடங்களும் மிகைகளும் | | |
| i) ஆரம்ப நிலை மட்டத்தில் 49 பதவி வெற்றிடங்களும், இரண்டாம் நிலை அலுவலகர் மட்டத்தில் 19 பதவி வெற்றிடங்களும், சிரேஸ்ட மட்டத்தில் 02 பதவி வெற்றிடமுமாக மொத்தமாக 70 வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை | உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| ii) சபையில் செயலாளர் மற்றும் கணக்காளர் பதவிகள் 05 ஆண்டுகளுக்கு மேலாக வெற்றிடமாக காணப்பட்ட போதிலும் அவற்றிற்கு உரிய இலங்கை நிர்வாக சேவை மற்றும் இலங்கை கணக்காளர் சேவையில் உள்ளவர்கள் உள்வாங்கப்பட்டிருக்கவில்லை. | எமது அலுவலகத்தின் செயலாளர் மற்றும் கணக்காளர் பதவிகளுக்கான வெற்றிடம் தொடர்பாக கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரூடாக கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் (நிர்வாகம்) அவர்களுக்கு முன்னளிக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| ஆ) ஊழியர் கடன் | | |
| பதவியனியினருக்கு கடன் பதிவேட்டின் பிரகாரம், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான நிலுவை மீதிகளில் 1993 ஆம் ஆண்டு தொடக்கம் 2000 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பணியாற்றிய ஊழியர்களது கடன் நிலுவை ரூபா 729,545 தொகையும் உள்ளடக்கப்பட்டிருந்தது. இக் கடன் | இம் மீதியினை தற்போது துரிதமாக சீர்செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. | -மேற்படி- |

தொகையினை முறையாக அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| 2020 திசெம்பர் 30 ஆம் திகதிய PT/12/2020 ஆம் இலக்க மாகாணத் திறைசேரி சுற்றுநிருபத்திற்கு அமைய நிதிக்கூற்றுக்கள் பெப்ரவரி 28 க்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2022 ஏப்ரல் 08 ஆம் திகதியே கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்வரும் காலத்தில் இறுதிக்கணக்குகள் சபை அங்கீகாரம் பெறப்பட்டு உரிய நேரத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய திகதிக்கு முன்னராக நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| மீளாய்வாண்டில் சபையினால் உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்படாமையினால் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் எவையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | தற்போது உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட்டு கடமைப்பட்டியல் வழங்கப்பட்டுள்ளது. | உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் 2019 தை மாதம் 12 ஆம் திகதிய DMA/01-2019 இலக்க சுற்றறிக்கைக்கமைய கணக்காய்வு முகாமைத்துவ குழு தாபிக்கப்பட்ட போதிலும் அதன் செயற்பாடுகள் திறம்பட மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிகழாண்டில் 1ம் மற்றும் 2ம் காலாண்டிற்கான கணக்காய்வு முகாமைத்துவ குழு கூட்டம் நடாத்தப்பட்டமை குறிப்பிடத் தக்கது. | சுற்றறிக்கைக்கு அமைவாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |